Register No. | | | | | | | | |

**FA7A** **6911–25**

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Five – year Regular Course)

Fourth Year – Seventh Semester

# BANKING LAW

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
★ ILLUPPUR - 622102. ★

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

## PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Nationalization of Banks have redefined the Indian Banking Landscape" – Analyse the statement with the benefits and detriments of Nationalization of Banking.

   "வங்கிகளின் தேசியமயமாக்கல் இந்திய வங்கியியல் பரப்பை மறுவரையறை செய்தது" – இவ்வாக்கியத்தை வங்கிகளின் தேசியமயமாக்கலின் நன்மை தீமைகளைக் கொண்டு ஆராய்க.

2. Is Letter of Credit a Negotiable Instrument? Explain the kinds of Letter of Credit.

   நம்பிக்கை நாணய கடிதம் மாற்றுமுறை ஆவணமாகுமா? நம்பிக்கை நாணய கடிதத்தின் வகைகளை விளக்குக.

3. Explain the obligation of the Banker to maintain secrecy of customers with exceptions.

   வங்கியரின் வாடிக்கையாளர் இரகசியம் பாதுகாக்கும் கடமையை விதிவிலக்குகளுடன் விவரி.

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்வும்.

4. Enumerate and explain permissible and impermissible material alterations in negotiable instruments.

   மாற்றுமுறை ஆவணங்களில் அனுமதிக்கப்படும் மற்றும் அனுமதிக்கப்படாத கருப்பொருள் மாற்றங்களை எடுத்தியம்பி விளக்குக.

5. Describe the credit control policies of the Reserve Bank of India as Bankers' Bank.

வங்கிகளின் வங்கியராக ரிசர்வ் வங்கியின் கடன் கட்டுப்பாட்டுக் கொள்கைகளை விவரி.

6. Define Cheque and differentiate truncated and electronic cheque.

காசோலையை வரையறுத்து, சிதைக்கப்பட்ட மற்றும் மின்னணு காசோலையை வேறுபடுத்துக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Minor as Customer

வாடிக்கையாளராக இளவர்

(b) Bad debts

வாராக் கடன்கள்

(c) Promissory Note

கடனுறுதிச் சீட்டு

(d) Scheduled and Non-Scheduled Banks

அட்டவணையிடப்பட்ட மற்றும் அட்டவணையிடப்படா வங்கிகள்

(e) Pass book

செல்லேடு

(f) Acceptor for Honour

மதிப்பிற்காக ஏற்றுக்கொள்பவர்

(g) Right of Banker to set off

வங்கியரின் ஈடுசெய்யும் உரிமை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A customer left his cheque book in an unlocked box and a leaf was stolen. The cheque was presented with the forged signature of the customer and duly paid by the bank. Who will be held liable? Banker or customer? Explain.

ஒரு வாடிக்கையாளர் மூடப்படாத ஒரு பெட்டியில் காசோலை புத்தகத்தை வைத்திருந்தார். ஒரு காசோலை திருடப்பட்டு வாடிக்கையாளரின் கையொப்பம் மோசடி செய்யப்பட்டு முன்னிடப்பட்டது மற்றும் வங்கியரால் உரியமுறையில் தொகை செலுத்தப்பட்டது. யார் பொறுப்பாவார்? வங்கியரா அல்லது வாடிக்கையாளரா? விளக்குக.

9. One of the secured creditors had taken the possession of the secured asset to the exclusion of the other creditor and sold it. Analyse the remedy for the borrower under the SARFAESI Act, 2002.

   பிணையக் கடனீந்தவர்களில் ஒருவர் மற்றொரு கடனீந்தவரை விடுத்து பாதுகாக்கப்பட்ட சொத்தின் உடைமையை எடுத்து விற்றுவிட்டார். நிதி சொத்துகளின் பத்திரமயமாக்கல், மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்க சட்டம், 2002ன் கீழ் கடன் வாங்குநருக்கு உள்ள தீர்வுகளை எழுதுக.

10. The cheques issued by "AB Company" to "XY" in discharge of liabilities were returned by the concerned bank with the remark "account closed". Does it amount to dishonouring of the cheque? Explain.

    'அஆ' நிறுவனம் தனது கடப்பாடுகளை தீர்ப்பதற்காக 'இஈ'-யிடம் கொடுத்த காசோலை, சம்பந்தப்பட்ட வங்கியால், "வங்கி கணக்கு மூடப்பட்டது" என்ற குறிப்புடன் திருப்பி அனுப்பப்பட்டது. இது காசோலை மதிப்பளிக்க மறுத்தலாகுமா? விளக்குக.

---

Register No. | | | | | | | | |

# FA7B

6912–25

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Five-year Regular Course)

Fourth Year – Seventh Semester

## LABOUR LAW – II

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

### PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define Bonus. Explain the provisions relating to calculation, quantum, ceiling and applicability of bonus under the Payment of Bonus Act, 1965.

   மீதூதியம் என்பதனை வரையறு. மீதூதியம் கணக்கிடுவதற்கான முறைகள், மீதூதிய தொகை, உச்ச வரம்பு மற்றும் மீதூதியம் பெறுவதற்கான தகுதி தொடர்பான 1965-ம் ஆண்டு மீதூதியம் வழங்கல் சட்டத்தின் வகையங்களை விளக்குக.

2. Briefly outline the benefits available under the Employees' State Insurance Act, 1948.

   1948-ம் ஆண்டு தொழிலாளர் அரசு காப்பீட்டுச் சட்டத்தின் கீழ் கிடைக்கக் கூடிய பலன்களை சுருக்கமாக எடுத்துக் கூறுக.

3. Explain the benefits available to a woman employee under the Maternity Benefit Act, 1961.

   மகப்பேறு நலன் சட்டம், 1961-ன் கீழ் ஒரு பெண் பணியாளருக்கு வழங்கப்படும் பலன்களை விளக்குக.

### PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the meaning and concept of social security.

   சமூகப் பாதுகாப்பு என்பதற்கான விளக்கம் மற்றும் கருத்தமைவு பற்றி விளக்குக.

5. "Accident arising out of and in the course of employment" – Elucidate.

"பணியின் போது அல்லது பணியின் விளைவாக ஏற்படும் விபத்து" – விவரிக்க.

6. State the restrictions under the Factories Act, 1948 for employment of women.

1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் பெண்களை பணிக்கு அமர்த்துதல் குறித்து கூறும் கட்டுப்பாடுகளை எடுத்துரைக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Permanent total disablement

நிரந்தர முழு தகுதியிழப்பு

(b) Continuous service

தொடர்ச்சியான பணி

(c) Scheduled Injuries

அட்டவணை காயங்கள்

(d) Powers of Factory Inspector

தொழிற்சாலை ஆய்வாளரின் அதிகாரங்கள்

(e) Employees Provident Fund

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி

(f) Applicability of the Tamil Nadu Shops and Establishments Act, 1947.

1947-ம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் தொழிலகங்கள் சட்டத்தின் அளாவுகை .

(g) Medical Benefit Council.

மருத்துவ நலக் குழு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Rajan joined service on 1.5.2018. He died due to heart attack on 15.12.2024, while working in the factory. His last drawn wages is Rs. 30,000/-. Decide the eligibility and calculate the gratuity amount, if eligible.

ராஜன் என்பவர் 1.5.2018-ல் பணியில் சேருகின்றார். 15.12.2024 அன்று தொழிற்சாலையில் பணி செய்த கொண்டிருக்கும் போது மாரடைப்பால் இறந்து விடுகிறார். அவர் கடைசியாக பெற்ற சம்பளம் ரூ. 30,000/-. ராஜன் பணிக்கொடை பெறத் தகுதியுடையரா? ஆம் எனில் தொகையைக் கணக்கிடுக.

9. A notice of dismissal was given by the employer to Azar during the period when he was in receipt of disablement benefit under the ESI Act, 1948. Discuss the effect of the notice of dismissal given by the employer.

அசார் என்ற தொழிலாளி, 1948-ம் ஆண்டு தொழிலாளர் அரசு காப்பீட்டுச் சட்டத்தின் கீழ் தகுதியிழப்பு பலன்களை பெற்றுக் கொண்டிருக்கும் போது முதலாளியால் பணி நீக்கம் குறித்த அறிவிப்பை பெறுகிறார். இந்த அறிவிப்பின் செயல்திறனை விவரி.

10. A motor mechanic was employing 25 persons for repairs of motor vehicles in an open space. There was only a small shed and power was used for welding and painting. The employees demanded sitting facilities. Decide whether it is a factory and also the employees' eligibility to claim sitting facilities.

திறந்தவெளியில் ஒரு சிறு கூரை அமைத்து 25 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி ஒரு பொறித்துறை வினைஞர் வாகனங்களை பழுதுபார்க்கும் தொழில் செய்து வந்தார். அங்கு வாகனங்களுக்கு வர்ணம் பூசவும், உடைந்த பாகங்களை ஒட்ட வைக்கவும் மின்சாரம் பயன்படுத்தப்பட்டது. அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் அமருவதற்கான வசதிகளை கோருகின்றனர். இந்த நிறுவனம் தொழிற்சாலையா? அங்கு பணிபுரியும் தொழிலாளர் அமருவதற்கான வசதிகளை கோர முடியுமா? தீர்வு காண்க.

---

Register No.

**FA7C** **6913-25**

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Five-year Regular Course)

Fourth Year – Seventh Semester

ENVIRONMENTAL LAW

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ★ ILLUPPUR - 622102. ★

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the Biological and Geographical aspects that should be taken into consideration in understanding environment.

சுற்றுச்சூழலைப் புரிந்து கொள்ளும் வேளையில் கருத்தில் கொள்ள வேண்டிய உயிரியல் மற்றும் புவியியல் நிலைகளை விளக்குக.

2. Describe the various legal provisions in criminal law regarding abatement of nuisance.

தொல்லை அகற்றல் தொடர்பாக குற்றவியல் சட்டத்திலுள்ள பல்வேறு சட்டப் பிரிவுகளை விவரிக்கவும்.

3. Discuss the right to live in a healthy environment with the help of decided cases.

ஆரோக்கியமான சுற்றுச்சூழலில் வாழ்வதற்கான உரிமையினை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளின் உதவியுடன் விவாதிக்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the important principles declared in U.N. Declaration on Human Environment (Stockholm Declaration).

மனித சுற்றுச்சூழல் மீதான ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்தின் (ஸ்டாக்ஹோம் பிரகடணம்) முக்கியக் கோட்பாடுகளை விளக்கவும்.

5. Analyse the powers and functions of the Central Pollution Control Board under the Air Act, 1981.
காற்றுச் சட்டம் 1981ன் கீழ் அமைக்கப்பட்டுள்ள மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகாரம் மற்றும் பணிகளை பகுப்பாய்வு செய்க.

6. Examine the contribution of social movements in the matters of environmental protection.
சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு குறித்த விஷயங்களில் சமுதாய இயக்கங்களின் பங்கினை ஆராய்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Mass Tort Action
பெருந்தீங்கு நடவடிக்கை

(b) Citizens' duty towards environment
சுற்றுச்சூழல் தொடர்பாக குடிமக்களின் கடமை

(c) Silent Valley case
அமைதிப் பள்ளத்தாக்கு வழக்கு

(d) Village Forests
கிராமக் காடுகள்

(e) Water Pollution
நீர் மாசு

(f) Performing Animals
கேளிக்கைக்குரிய விலங்குகள்

(g) Environmental Protection Fund
சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதியம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A heavy metal scrap dealer in a residential area was causing loud and continuous noise that affected the health and comfort of those dwelling in the neighbourhood. The residents approached the magistrate to abate the nuisance. What is the action expected of the magistrate?
மக்கள் குடியிருக்கும் பகுதியில் ஒரு கன உலோக கழிவு வணிகர் தொடர்ந்து அதிக அளவில் இரைச்சல் ஏற்படுத்தினார், அதனால் அப்பகுதியில் குடியிருப்போருக்கு உடல் நலன் மற்றும் சுகங்களில் கேடு ஏற்பட்டது. அங்கு வசிப்போர் குற்றவியல் நடுவரை அணுகி தொல்லையைப் போக்கக் கோரினர். குற்றவியல் நடுவர் எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்வார்?

9. The National Green Tribunal banned sand mining from the river beds for those mining carried out without environmental clearance. An appeal was filed before the Supreme Court against the decision of the tribunal – Decide.

தேசிய சுற்றுப்புறச் சூழல் தீர்ப்பாயம் சுற்றுச்சூழல் இசைவு பெறாதவர்கள் ஆற்றுமணல் படுகைகளில் மணல் அள்ளுவதற்கு தடைவிதித்தது. தீர்ப்பாயத்தின் முடிவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது – தீர்மானிக்கவும்.

10. Chemical pesticides were stored in a godown in a residential area. Fumes emanating from the pesticides leaked to the contiguous property through ventilators which resulted in death of three children and an infant in the womb of the mother. Decide the statutory remedies that are available to the victims.

இரசாயன பூச்சிக்கொல்லியை குடியிருப்பு பகுதியிலுள்ள கிடங்கில் வைத்திருந்தனர். பூச்சிக் கொல்லியிலிருந்து வெளியேறிய புகை, பக்கத்தில் இருந்த கட்டடத்திற்கு வெளிச்சம் வரும் துவாரத்தின் வழியே பரவியதனால் மூன்று சிறுவர்கள் உட்பட ஒரு தாயின் கருவிலிருந்த சிசுவும் இறக்க நேரிட்டது. பாதிக்கப்பட்டவர்களுக்கு எத்தகைய சட்டமுறையான தீர்வுகள் கிடைக்கப் பெறலாம் என்பதை தீர்மானிக்கவும்.

---

Register No. | | | | | | | | |

**FA7D** **6914–25**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Five-year Regular Course)

Fourth Year – Seventh Semester

ADMINISTRATIVE LAW

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
★ ILLUPPUR - 622102. ★

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the doctrine of separation of powers and its application in India.

   அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டை விளக்கி, இந்தியாவில் அதன் செயலாக்கத்தை விளக்கவும்.

2. Discuss with the help of decided cases, the limits on the delegation of legislative power in India.

   இந்தியாவில் சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பின் மீதுள்ள வரம்புகளை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளின் உதவியோடு விளக்குக.

3. "The various components of fair hearing are not fixed but are flexible and their scope and applicability differ from case to case" – Elucidate.

   நேரிய விசாரணை என்பதன் பல்வேறு கூறுகள் நிலையானவை அல்ல, அவை நெகிழ்வு தன்மை கொண்டவை. மேலும் அவற்றின் அளாவுகையும் பொருந்தும் தன்மையும் வழக்கிற்கு வழக்கு மாறுபடும்" – விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the different kinds of bias.

   மனச் சாய்வின் வகைகளை விளக்குக.

5. State the functions of Central Vigilance Commission.

மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்தின் செயல்பாடுகளை எடுத்துரைக்க.

6. Discuss the rights and liabilities of public corporations and explain its importance in the modern welfare state.

பொது ஆணையத்தின் உரிமைகள், பொறுப்பு நிலைகள் மற்றும் தற்கால மக்கள் நல அரசில் இதன் முக்கியத்துவம் குறித்து விவாதிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Rule of Law.

சட்டத்தின் ஆட்சி.

(b) Franks Committee Report.

பிராங் குழு அறிக்கை.

(c) Conditional Legislation.

நிபந்தனைக்குட்பட்ட சட்டமாக்கல்.

(d) Promissory estoppel.

வாக்குறுதி வழி முரண்தடை.

(e) Retrospective rule making.

பின்னோக்கிய விதியாக்கம்.

(f) Reasons for growth of public corporations.

பொது ஆணையத்தின் வளர்ச்சிக்கான காரணங்கள்.

(g) L. Chandra Kumar vs. Union of India AIR 1997 SC 1125.

எல். சந்திரகுமார் எதிர் இந்திய ஒன்றியம். AIR 1997 SC 1125.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Aarav is detained by the Executive Magistrate claiming that his presence is dangerous to the security of the state. Later, finding that he was innocent, he was released. Now he claims damages from Government for illegal detention. Decide.

'ஆரவ்'–ன் செயல்பாடு நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து விளைவிக்கும் என நிர்வாகத்துறை நடுவரால் காவலில் வைக்கப்படுகிறார். பின்பு அவரால் எவ்வித ஆபத்தும் இல்லை என்று கண்டறியப்பட்டு விடுவிக்கப்படுகிறார். தன்னை சட்டத்திற்கு புறம்பாக காவலில் வைத்ததற்கு ஆரவ் அரசிடமிருந்து இழப்பீடு கோருகிறார். முடிவு செய்க.

9. 'A', a prisoner, filed a writ petition in the High Court alleging that unsatisfactory and inhuman conditions were prevailing in the prison. Whether 'A' has got 'locus standi' to file such writ petition and is it maintainable?

'அ' என்ற ஒரு கைதி சிறையின் உள்ளே உள்ள திருப்திகரமற்ற மற்றும் மனிதாபிமானமற்ற சூழ்நிலையை மேற்கோள் காட்டி உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுதாக்கல் செய்கிறார். அவ்வாறு வழக்குத் தொடுக்க அவருக்கு 'வழக்காடும் உரிமை' உள்ளதா? அந்த வழக்கு நிலைக்குமா?

10. Varun is an employee in the education department of the State. Charges were framed against him for receiving bribe. The photostat copy of the framed charges were given to him. But the letters in the photostat copy were not clear. He requested for another copy. It was denied. He challenged this for want of proper notice. Advise him.

வருண் என்பவர் அரசின் கல்வித் துறையில் பணிபுரிகின்றார். அவர் இலஞ்சம் வாங்கியதாக அவர் மீது புகார் தயார் செய்யப்பட்டது. அதன் நகல் அவருக்கு வழங்கப்பட்டது. அந்த நகலில் உள்ள எழுத்துகள் தெளிவாக இல்லை. அரசிடம் தெளிவான நகலை கேட்கிறார். அது மறுக்கப்படுகின்றது. இதனை எதிர்த்து வருண் தெளிவான அறிவிப்பு வேண்டி வழக்கிட விரும்புகிறார். ஆலோசனை கூறுக.

———————